

தமிழ்ச்சிட்டு
கரு
15
காசு
தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

தென்மொழி
தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்
கடலூர்-1



# தமிழ்ச்சிட்டு

## தனித்தமிழ் சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல் 1 | தி. பி. ககூகூஎ. ஆவணி. (ஆகஃச்டு) | இசை – 1.

### பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்
### சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

குழந்தைகளே!

**த**மிழ்ச்சிட்டு உங்கள் கைகளில் தவழ்கின்றது. இது தமிழ்ப் பால் ஊட்டி உங்களை வளர்க்கப் போகின்றது. நீங்கள் இன்று சிறியவர்கள். நாளை நீங்கள்தாம் இந்நாட்டின் குடிமக்கள். இப்பொழுதுள்ள பெரியவர்களில் பலர் உருவத்தால் மட்டும் பெரியவர்களாக இருப்பவர்கள். சிலர் மட்டுமே அறிவாலும் பெரியவர்களாக இருப்பவர்கள். நீங்களும் அவர்களைப் போல அறிவால் பெரியவர்களாக வேண்டும். செயற்கு அரிய செய்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்:— பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்:- இறைக்குருவன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

உங்களில் சிலர் உருவத்தால் சிறியவர்களாக இருப்பினும். அ
வால் பெரியவர்களாக இருக்கலாம். உங்களுக்கிருக்கும் அறி
மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நம் நா
மிகவும் வலிவும் பொலிவும் பெற்று விளங்கும்.

தமிழ்ச்சிட்டு உங்கள் நண்பன்; ஆசிரியன்; வழிகாட்டி! ஒ
வொரு மாதமும் தமிழ்ச்சிட்டு உங்களைத் தேடி வரும். பல பல அறி
செய்திகளையும் கதைகளையும் பாட்டுகளையும் உங்களுக்கு
தரும். அவற்றை நீங்கள் தவறுமல் படித்துப் பயன் பெறுங்கள்
விரைவில் இது கிழமை தோறும் வெளிவர முயலுவோம். அதற்
உங்கள் அன்பும் துணையுமே தேவை!

---

## கோழிக் குஞ்சின் பிண ஊர்வலம்…!

பஞ்சிமில் மர்மகோவா என்ற ஊரில் மக்கள் 5 பேர்களுக்கு மே
சேர்ந்து நடமாடக்கூடாது என்று ஒரு சட்டம் போட்டார்கள். ஆனு
திருமண ஊர்வலங்கள் பிண ஊர்வலங்கள் இவற்றை நடத்தலா
என்று கூறியிருந்தார்கள்.

ஒருநாள் தெருவில் 150 ஆண்களும் பெண்களும் கூடிக்கொண்டு
கூட்டமாகப் போவதைக் காவலர்கள் பார்த்து வியந்தனர். அச்
கூட்டம் என்ன கூட்டம் தெரியுமா? ஒரு கோழிக்குஞ்சின் பிண ஊர்
வலம்! இறந்துபோன ஒரு கோழிக்குஞ்சைப் பாடையில் வைத்துத்
தூக்கிக்கொண்டு அவர்கள் ஊர்வலம் போனுர்கள். அதிகாரிகள்
அவர்களைச் சிறைப் படுத்துவதா இல்லையா என்று தெரியாமல் விழித்
தார்கள்.

அரசினர் செய்வது தவறு என்பதைச் சுட்டிக் காட்டவே
அவர்கள் அப்படிச் சென்றுர்களாம்!

---

**உங்கள் வீட்டில் தென்மொழி படிக்கின்றனரா?**
**இல்லையானுல் இன்றே வாங்கிப் படித்துப்**
**பயனடையச் சொல்லுங்கள்.**

தென்மொழி, கடலூர்-1.

# உலகம் சுற்றுவோம்

## தாசுகண்டில் நிலநடுக்கம் !

உருசியா நாட்டில் தாசுகண்டு என்ற நகரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள் இல்லையா! அந்நகரில் ஏப்ரல் மாதம் 26–ஆம் நாள் முதல் நில நடுக்கம் ஏற்பட்டு வருகின்றது. இதுவரை அங்கு 526 தடவை நில நடுக்கம் ஏற்பட்டுவிட்டது. இன்று அங்கு மக்களே இல்லை. எல்லாரும் வெளியேற்றப்பட்டனர். நகரில் உள்ள கட்டிடங்கள் பெரும்பாலும் இடிந்துவிட்டன. அங்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் மதிப்பு இன்னும் தெரியவில்லை.

*

## பாண்டிச்சேரியில் கல்நெய் (பெட்ரோல்)

கல்கத்தாவிலிருந்து சென்னை வரையிலுள்ள கடற்கரைக்கு அடியில் கல்நெய் (பெட்ரோல்) கிடைக்குமா என்று தேடிப்பார்த்தார்கள். ஆனால், பாண்டிச்சேரிக்கும் காரைக்காலுக்கும் இடையில் உள்ள கடற்கரைக்கு அடியில்தான் கல்நெய் கிடைக்கும் என்று கண்டு பிடித்திருக்கின்றார்கள். எனவே கடற்கரையைத் தோண்டும் முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது.

*

## சுந்தா தீவுகளில் கடும்பஞ்சம் !

சாவாத் தீவுக்குக் கிழக்கில் சுந்தா என்ற சிறு சிறு தீவுகள் உள்ளன. இங்குள்ள மக்கள் தொகை ஏறத்தாழ 40 இலக்கம். இங்குச் சில மாதங்களாக மழையே பெய்யவில்லை. அதனால் கடும் வறட்சி ஏற்பட்டது. புல் பூண்டு கூட முளையவில்லை. இங்குக் கடந்த ஆறு மாதங்களுக்குள் ஏறத்தாழ 3000 பேர்களும் ஏராளமான கால்நடைகளும் இறந்து போனார்கள். அம்மை, குளிர் காய்ச்சல் முதலிய நோய்களும் அங்குள்ள மக்களை வாட்டி எடுக்கின்றன.

*




## தேன்கூடே தமிழ்ச்சிட்டு!

......நெடுநாட்களுக்கு முன் தேன்கூடாகத் திகழ்ந்திருக்கவேண்டிய சிறுவர் இதழ் தேன் சொட்டும் தீஞ்சுவைத் தமிழ்ச்சிட்டாக மலரப் போவது கண்டு மனமாரப் பூரிக்கின்றேன். தென்மொழி போல் தமிழ்ச்சிட்டும் தனித்தமிழ் வளர்ச்சியில் சிறாரை ஊக்கி வளர்த்து வெற்றி பெறத் தமிழ்த்தாய் வாழ்த்தும் தமிழகத் துணையும் பெருகல் வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

மு. மகிழரசன். சென்னை–24.

## வண்ணப் படங்கள்.

......இதழில் சிறுவர் மகிழ்வுக்கு விருந்தளிக்கும் வண்ணப் படங்கள் நிறைந்திருக்க வேண்டும் என்பதை நினைவூட்டுகின்றேன். மாணக்கர் பலர் பணம் கட்ட அணியமாயுள்ளனர்.

இரா கணபதிராசன். கூடலூர், மதுரை மாவட்டம்.

## சிறிய உள்ளம் துள்ளுகின்றது... !

......... தமிழ்ச்சிட்டு இனிக்கப் பிறந்து மணக்கப்பாடும் என்பதை அறிந்து எனது சிறிய உள்ளம் உவகையால் துள்ளுகின்றது. தமிழ்ச்சிட்டினை என் .தமிழ்க் குடில் நோக்கிப் பறக்க விடக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சே. புகழேந்தி, தஞ்சாவூர்.

## நல்ல பணி...!

இதழ் வெளி வருவது கண்டு பெரிதும் மகிழ்கின்றேன். தென்மொழி போன்று சிறுவர் உலகிலும் நல்லதொரு பணியைக் கடமையுணர்வொடு செயல் புரிய முனைந்தமைக்கு வாழ்த்துகின்றேன்.

இரா. திருச்செல்வி. நுங்கம்பாக்கம், சென்னை.

# நாடுகள் காண்போம் !

## 1. இந்தியா.

இந்திய நிலத்தின் பரப்பு 12,69,640 சதுரக் கற்களாகும். இந் நிலப் பரப்பு தெற்கு வடக்காக 20.000 கற்கள் நீளமும், கிழக்கு மேற்காக 1700 கற்கள் நீளமும் கொண்டது. இது பிரிட்டிசு தீவுகளைப் போல் 13 மடங்கு பெரியது. சப்பானைப் போல் 8 மடங்கு பெரியது. அமெரிக்காவின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு இந்தியா. உருசியாவின் நிலப்பரப்பில் ஏழில் ஒரு பங்கு நிலப்பரப்புடையது. உலக நாடுகளில் இஃது ஏழாவது பெரிய நாடு. இஃது ஒரு குடியரசு நாடாகும்.

இங்கு இரும்பு, மங்கனம் (மாங்கனிசு), பொன், செம்பு, மட்ட வெள்ளி, காக்கைப் பொன், மண்ணெய், நிலக்கரி முதலிய தாதுப் பொருள்கள் கிடைக்கின்றன. இங்குள்ள காடுகள் 2,80,159 சதுரக் கற்கள் பரப்புடையன. இவற்றினின்று ஆண்டு தோறும் 200 கோடி உருபாக்களும் ஏறத்தாழ 500 கோடி கன அளவு மரங்களும் கிடைக்கின்றன. வேளாண்மை வழி 4500 கோடி உருபா வருமானம் கிடைக்கின்றது. இந்தியாவின் மொத்த வருமானத்தில் இது பாதித் தொகையாகும்.

இங்கு 420 வகை விலங்கினங்களும் ஏறத்தாழ 1700 வகை பறவை இனங்களும், 550 வகை ஊர்வன இனங்களும், 1500 வகை மீன் இனங்களும், 140 வகைத் தவளை இனங்களும் உள்ளன.

இங்கு ஒரு சதுரக் கல்லுக்கு ஏறத்தாழ 296 பேர் வாழ்கின்றனர். இதன் மொத்த மக்கள் தொகை ஏறத்தாழ 47 கோடியாகும். இஃது உலக மக்கள் தொகையில் ஏழில் ஒரு பங்கு ஆகும்.

இங்குள்ள மக்களில் ஏறத்தாழ 25 கோடிப் பேர் உழவுத் தொழில் செய்கின்றனர். ஏறத்தாழ $2\frac{1}{2}$ கோடிப்பேர் வாணிகர்கள். ஏறத்தாழ $4\frac{1}{2}$ கோடிப்பேர் பிற தொழில்களைச் செய்து வருகின்றனர்.

இங்கு 17? மொழிகளும், 544 கிளை மொழிகளும் பேசப்படுகின்றன. இவற்றில் அசாமி, உரியா, உருது, இந்தி, கன்னடம், காசுமீரி, குசராத்தி, சமற்கிருதம், தமிழ், தெலுங்கு, பஞ்சாபி. மராட்டி, மலையாளம், வங்காளம் ஆகிய 14 மொழிகளையும் தேசிய மொழிகளாகக் கொண்டுள்ளனர்.

85:187




## எழு தம்பி !

—துரை மாணிக்கம்.

தூங்கி இருந்தது போதும்; எழு; தமிழ்த்
தம்பியே! — இளந்
தும்பியே! — எழில்
துள்ளும் தமிழ் நலம் காத்திடு; என் சொல்லை
நம்பியே — பொற்
கம்பியே !
ஓங்கி உயர்ந்த நற் பல்கலை சேர்ந்ததுன்
நாடடா — தேன்
கூடடா ! —உல
கோர்க்கெலாம் நல்லறம் தந்ததென்(று) அப்புகழ்
பாடடா !-அதைத்
தேடடா !

ஊனில் உயிரினில் தோய்வுறச் செந்தமிழ்ப்
பாடியே — வானம்
பாடியே! — இங்கு
உள்ள பழந்தமிழ் நூல்களை நீ, படி
நாடியே — இணை
கூடியே !
வீணர் செயலிலும் பேச்சிலும் வாழ்வினை
வீழ்த்தினாய்; — தமை
வாழ்த்தினாய் ! — ஒளி
விளக்க மிலாத இருள் வழி யில்உனை
ஆழ்த்தினாய் — உயிர்
தாழ்த்தினாய் !

S:187



எல்லை யிலாத அறிவியல் விண்ணியல்
கூறுவாய் – அதில்
தேறுவாய் – எனில்
எத்தும் புரட்டும் இழிசெயல் யாவிலும்
ஊறுவாய் – உளம்
நாறுவாய் !
தொல்லை தரும்இழி சாதிப் புகைச்சலை
மூட்டினூர் – வாய்
நீட்டினூர் – உன்
தொல்தமிழ் மக்களை வேற்றுமைத் தீயினில்
வாட்டினூர் – துயர்
கூட்டினூர் !

பள்ளிப் பறவையே! ஒன்றுனக் கோதுவேன்;
கேட்டிடு – உளம்
நாட்டிடு ! – கொடும்
பல்வழி போகுநின் மக்களை ஒன்றெனக்
கூட்டிடு – வழி
காட்டிடு !
உள்ளத் துயர்வே உயர்வெனக் கூறுக
பிள்ளையே – தமிழ்க்
கிள்ளையே ! – நெஞ்சில்
உண்மையும், வாழ்வில் ஒழுங்கும் இலார் கண்கள்
நொள்ளையே – காது
தொள்ளையே !

—1966

## எழுத்தே தெரியாதவர்களும் படிக்கலாம்.

எழுத்தே தெரியாதவர்கள் படிக்க முடியாது இல்லையா? இனி மேல் அவர்களும் நம் போல் பெரிய பெரிய நூல்களைக் கூடப் படிக்கலாம். உருசியாவில் இப்பொழுது ஒருவகையான எழுதுகோல் கண்டு பிடித்திருக்கின்றனர். அந்த எழுதுகோலைப் புத்தகங்களில் அச்சிடப் பட்டிருக்கும் வரிகளின் மேல் வைத்து நகர்த்திக் கொண்டு வர வேண்டியதுதான்! உடனே அந்த எழுதுகோல் அதில் என்ன எழுதியிருக்கின்றது என்பதைக்காதுகளில் பொருத்திக் கொண்டுள்ள ஒலி பெருக்கி சொல்லுகின்றது. எப்படி அறிவியல் முன்னேற்றம்!

# உங்களுக்குத் தெரியுமா?

O நமக்குத் தெரியும் வான வெளியை இமயமலைக்கு ஒப்பிட்டால் அதில் நாம் வாழும் உலகம் ஒரு கடுகுக்கு ஒப்பாகும்.

O வானத்தில் நம் கண்களுக்குத் தெரியும் விண்மீன்கள் இங்கிருந்து மிகமிகத் தொலைவில் உள்ளன. அவற்றில் நமக்குத் தெரியும் எல்லை வரை நாம் போய் வர எவ்வளவு காலம் ஆகும் தெரியுமா? ஒரு நொடிக்கு 1,86,000 கற்கள் (மைல்கள்) விரைவில் நாம் செல்ல முடியுமானாலும் கூட நாம் அந்த எல்லையை அடைய 600 கோடி ஆண்டுகள் ஆகும்!

O வானத்தில் உள்ள ஒரு பகுதியைப்பால்வெளி மண்டிலம் எனக் கூறுவர். வான வெளியில் கணக்கற்ற பால்வெளி மண்டிலங்கள் உள்ளன. ஒவ்வொரு பால்வெளி மண்டிலத்திலும் கணக்கற்ற விண்மீன் மண்டிலங்கள் உள்ளன. அப்படி உள்ள ஒரே ஒரு விண்மீன் மண்டிலத்தில் உள்ள விண்மீன்களை மட்டும் நாம் எண்ணுவதாக வைத்துக் கொள்ளுவோம். ஒரு நொடிக்கு ஒரு விண்மீனாக நாம் எண்ணிக்கொண்டே போனாலும் அதிலுள்ள விண்மீன்கள் அத்தனையும் எண்ணி முடிக்க 2500 ஆண்டுகள் ஆகும்.

O பரந்துள்ள வான வெளியில் மிதக்கின்ற விண்மீன்களையெல்லாம் எவ்வளவு என்று கணக்கிட்டு உள்ளார்கள் — தெரியுமா? அந்த எண்ணைச் சொல்லவே முடியாது. சொன்னாலும் புரிந்து கொள்ளவே முடியாது. ஆனால் அதற்கு ஓர் அளவைச் சொல்லியிருக்கின்றார்கள்.

கடற்கரையில் உள்ள மணலில் ஒரு கை மணலை அள்ளி ஒரு தாளில் வைத்து அவற்றை எண்ணிப் பாருங்கள். உங்களால் முடிகின்றதா? இல்லை! ஆனால் வானவெளியில் அத்தனைமீன்களா உள்ளன? இல்லை. பின் எவ்வளவு என்று நினைக்கின்றீர்கள்? ஒரு கை மணல் இல்லை; ஒரு கடற்கரையில் உள்ள மணல் மட்டுமில்லை; உலகத்தில் உள்ள கடற்கரைகள் அத்தனையிலும் கொட்டிக் கிடக்கும் மணல்களை யெல்லாம் ஒவ்வொன்றாக எண்ணினால் எவ்வளவு இருக்குமோ ஏறத்தாழ அவ்வளவு விண்மீன்கள் இருக்கின்றனவாம். அடேயப்பா! மயக்கம் வருகிறதில்லையா?



# பெரியோர் கதை!

## பெஞ்சமின் பிராங்களின்

இவ்வுலகில் மிகவும் ஏழையாகப் பிறந்து, தம் விடாமுயற்சியாலும் உழைப்பாலும் அறிவாலும் முன்னேறி நாட்டுக்கு உழைத்த பெரியோர் பலராவர். அவர்களில் பெஞ்சமின் பிராங்களினும் ஒருவர்.

பெஞ்சமின் பிராங்களின் அமெரிக்காவில் போசுடன் நகரில் 1706-இல் பிறந்தார். இவர் தந்தை பெயர் சோசையா பிராங்களின். இவருக்குப் பிறந்த 17 பிள்ளைகளுள் பெஞ்சமின் 15-ஆவது குழந்தை. பெஞ்சமினின் தந்தை மெழுகுத் திரிகள் செய்து விற்றுப் பிழைத்து வந்தார். இவ் வாணிகத்தில் போதிய வருமானமில்லாமல் இருந்ததால், தம் பிள்ளைகள் எல்லாரையும் இளமைப் பருவத்திலேயே வேலைகளுக்கு அனுப்பி வைத்தார்.

சிறிய பெஞ்சமின் எந்த வேலையிலும் நாட்டமின்றி இருந்தான். தச்சு வேலை, கருமார் வேலை, வீடு கட்டும் வேலை முதலிய எந்த வேலையும் அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே அவனுடைய அண்ணன் வைத்திருந்த அச்சகம் ஒன்றிலே அவன் எடுபிடி வேலை செய்துவந்தான். அச்சுப் பொறியைத் துடைப்பான்; அச்சு எழுத்துகளைக் கழுவி வைப்பான்; அச்சகத்தைப் பெருக்கித் தூய்மை செய்வான். ஆனாலும் இடையிடையே படித்து வந்தான்.

சிறுவனாக இருக்கும் பொழுதே கதைகள், கட்டுரைகள், பாட்டுகள் எழுதி வந்தான். இவற்றை அண்ணன் நடத்தி வந்த செய்தித் தாளுக்கு யாருக்கும் தெரியாமல் அனுப்பி வந்தான். அவை பெயரின்றி அச்செய்தித் தாளில் வெளியிடப் பெற்றன. இதனால் ஊக்கம் அடைந்த அவன் மேலும் மேலும் படிக்கலானான். நாளடைவில் அவனுக்கு எடுபிடி வேலை கசந்தது. எனவே அவன் நியூயார்க்கு நகரில் உள்ள பிலடெல்பியா என்ற

ஊருக்கு ஓடிவிடத் திட்டமிட்டான். அவ்வூருக்குப் படகில் போகவேண்டும். பெஞ்சமின் படகுக் கட்டணத்திற்கு எங்கே போவான்? இறுதியில் படகில் வேலை செய்வதாக ஒப்புக்கொண்டு அந்த வருமானத்தைப் படகுக் கட்டணமாகக் கொடுக்க இசைந்தான்.

பிலடெல்பியாவில் இவன் இறங்கும் பொழுது கையில் மூன்று 'பென்னி' தான் இருந்தது. உடலிலோ அழுக்குச் சட்டை. கையிலுள்ள காசுக்குக் கோதுமை வறட்டி வாங்கிச் சட்டைப்பையில் திணித்துக்கொண்டு நடந்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த டிபோரீட் என்ற ஓர் அழகிய சிறுமி கை கொட்டிச் சிரித்தாள். ஆனால் ஏழு ஆண்டுகளுக்குப் பின் அவளே அவனுக்கு மனைவியாக வந்து வாய்த்தாள்.

பிலடெல்பியாவில் பெஞ்சமின் கடினமாக உழைத்தான். நூலகங்களில் படித்தான். சில வேளைகளில் பட்டினி கிடந்தான். உழைத்து வந்த கூலியில் மிச்சம் பிடித்தான். இடைவிடாத முயற்சியால் 25-வது அகவையில் 'கெசட்' என்ற செய்தித் தாளிகைக்குப் பெஞ்சமின் ஆசிரியரானார். அச்சகம் ஒன்றை வைத்தார். தாளிகை நிறைய விற்றது. தொழில் விரைவில் வளர்ந்தது. பொதுமக்கள் படித்து முன்னேற வேண்டும் என்று விரும்பினார். புத்தகங்களை ஏராளமாகச் சேர்த்துச் சிறிய நூல் நிலையம் ஒன்றை வைத்தார்.

அக்காலத்தில் நகரக் காவல் முறை சரியில்லை. எனவே பெஞ்சமின் இளைஞர்களைச் சேர்த்து நகரக் காவல் படை ஒன்றை அமைத்தார். இதுவே இக்காலத்தில் ஊர் காவலர் (போலீசு) படையாக வளர்ந்தது. பொது மக்களின் உடல் நோய்களைப் போக்குவதற்கு மருந்துக் கூடம் வைத்து மருந்துகளை இலவசமாக எல்லாருக்கும் கொடுத்தார். இது மருத்துவ மனைகள் விரிவடையத் துணை செய்தது. மேலும் பிராங்களின் இளைஞர்களின் உதவியால் ஓர் ஊரில் இருக்கும் அஞ்சல்களை மற்றோர் ஊருக்குக் கொண்டுபோய்க் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். ஒரு பென்னியுள்ள அஞ்சல் தலைகளை அச்சிட்டு அவற்றின் மேல் ஒட்டினார். இம்முறையே அஞ்சல் துறையாக விரிவடைந்தது. ஒழுங்கு, விடாமுயற்சி, உழைப்பு, உண்மை இவையே பெஞ்சமின் கடைப்பிடித்தவை.

பெஞ்சமின் இறுதிவரை படித்துக்கொண்டே இருந்தார். பிரஞ்சு, இத்தாலியன், இசுப்பானிசு இலத்தின் ஆகிய மொழிகளை எவருடைய உதவியுமின்றித் தானே கற்றுக்கொண்டார். உலக இலக்கியங்களைக் கற்றார். இசை கற்றார் யாழ், கின்னரம், கித்தார் முதலிய இசைக் கருவிகளை இசைக்கப் பழகிக் கொண்டார்.


பெஞ்சமின் பிராங்களின் சிறந்த பேச்சாளர்; எழுத்தாளர். அறிவியல் முறையில் வேளாண்மை செய்தார். எறும்பைப் பற்றி ஆராய்ந்து அரிய செய்திகளை வெளியிட்டார். இடியும் மின்னலும் காற்றிலுள்ள மின்சார அலைகளால் உண்டாவதை மெய்ப்பித்துக் காட்டினார். அவர் கண்டுபிடித்த மின்சார உண்மைகளே பிற்காலத்தில் தொலைபேசி, தொலைவரி, மின்சார விளக்குகள், வானொலிப் பெட்டிகள் முதலியவற்றைக் கண்டுபிடிக்கப் பயன்பட்டன.

அவரிடம் பலரும் வந்து அவர் அறிவுரைகளைக் கேட்டனர். அவர் அரசியலிலும் ஈடுபட்டு அரசினர்க்குப் பலவகையிலும் அறிவுரை கூறினார். இங்கிலாந்து சென்று 10 ஆண்டுகள் தங்கினார். அதன் விளைவாக அமெரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் நல்லுறவை ஏற்படுத்தினார். அப்பொழுது அமெரிக்காவின் படைத்தலைவராக இருந்த சியார்சு வாசிங்டன் என்பவரிடம் நட்புப் பூண்டு, அவருக்கு அரசியல் நடவடிக்கைகளில் துணையாக இருந்தார். அதன்பின் அமைச்சராக்கப் பட்டார். இறுதியில் பிரான்சு நாட்டிற்குத் தூதுவராக இருந்தார்.

நல்ல அறிஞராகவும், அறிவியல் ஆராய்ச்சியாளராகவும், எழுத்தாளராகவும், பாவலராகவும், அமைச்சராகவும் இருந்த பெஞ்சமின் பிராங்களின் இறுதியாக 1790 ஆம் ஆண்டில் தம் 84-ஆம் அகவையில் பிலடெல்பியாவில் காலமானார். அவர் ஏழையாய்ப் பிறந்து அழியாப் புகழ் பெற்றது போல் நீங்களும் விளங்க வேண்டும் இல்லையா?

## நேர்மைக்குப் பரிசு !

நடைபாதையில் சென்றுகொண்டிருந்தனர் இரண்டு மாணவர்கள். ஒரு பை கிடந்தது. எடுத்துப் பார்த்தனர். அதில் 3500 உருபா இருந்தது. உடனே அவர்கள் அதை எடுத்துக்கொண்டு போய் அருகில் இருந்த காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டனர். சென்ற மாதம் சென்னையில் நடந்தது இது. இரண்டு மாணவர்களின் நேர்மையைப் பாராட்டி ஒவ்வொருவருக்கும் நூறு, நூறு உருபா பரிசளித்தனர். நேர்மையான மாணவர்களுக்குப் பரிசு கொடுத்தது சரிதானே !




## 1. தொல்காப்பியம்.

சிறுவர் சிறுமியர்களே! தமிழ் மொழி நாம் பேசுகின்ற மொழி. இப்மொழி மிகவும் பழமையான மொழி; இனிமையான மொழி; செப்பமான மொழி. ஒரு மொழி மிகவும் செப்பமாக இருப்பதற்கு அதன் இலக்கணமே காரணமாகும். தமிழ் மொழியில் உள்ள மிகப் பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம். இது பிற மொழியிலுள்ள இலக்கண நூல் போல் இல்லாமல் மக்கள் வாழ்க்கை வழி வழியான பழக்க வழக்கம் என்பவற்றைப் பற்றி யெல்லாம் மிக மிக விரிவாக எடுத்துச் சொல்கின்றது. எனவே இஃது ஓர் இலக்கண நூலாகவும் இலக்கிய நூலாகவும் விளங்குகின்றது. இலக்கியம் என்றால் மக்கள் வாழ்க்கைக்கு இலக்காக உள்ள நூல் என்று பொருள். இலக்கு என்பதும் குறிக்கோள் என்பதும் ஒன்றே.

இஃது ஏறத்தாழ நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப் பெற்றதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதனை எழுதியவர் தொல்காப்பியர் என்ற முனிவர். பழங்காலத்தில் எல்லா நூல்களும் முனிவர்களாலேயே எழுதப் பெற்றன.

இது செய்யுள் வடிவில் எழுதப் பெற்ற நூல். இதற்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் கல்லாடர் முதலியோர் உரை யெழுதியுள்ளனர்.

தொல்காப்பியத்தை எழுதிய தொல்காப்பியர் சிறந்த அறிஞர். ஆராய்ச்சி வன்மை உடையவர். இந்த நூல் ஒரு வரலாற்று நூல் போல் சிறந்து விளங்குகின்றது. இதில் உள்ள செய்யுள்கள் சிறு சிறு நூற்பா (சூத்திரம்) வடிவில் உள்ளன.

இந்நூலில் உள்ள செய்திகள் எழுத்து அதிகாரம், சொல் அதிகாரம், பொருள் அதிகாரம் என்று பகுக்கப் பெற்றுள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு உள்ள உரைகளில் இளம்பூரணர் எழுதிய உரை ஒன்றே முழுமையாக உள்ளது.

இந்நூலுக்கும் பனம்பாரனுர் எழுதிய சிறப்புப்பாயிரம் என்ற பாராட்டுச் செய்யுள் ஒன்று உளது. அதில் தொல்காப்பியரின் அறிவு மிகவும் பாராட்டப் பெற்றுள்ளது.

பிள்ளைகளே நீங்கள் பெரியவர்களானதும் தவருமல் தொல்காப்பியத்தைக் கற்றுத் தமிழறிவு பெறவேண்டும். O

## எலிகளா? புலிகளா?

எலிகள் தானே என்று எளிதாக நினைத்துவிடாதீர்கள். இவை மக்கள் தொகையோடு போட்டி போட்டுக்கொண்டு பெருகி வருகின்றன. இப்பொழுது இந்தியாவில் உள்ள எலிகள் எல்லாவற்றையும் பிடித்து இங்குள்ள ஒவ்வொருவருக்கும் பங்கு போட்டுக் கொடுத்தால் ஆளுக்கு 5 எலிகள் வரும். அப்படியானுல் எவ்வளவு எலிகள் இந்தியாவில் இருக்கின்றன தெரியுமா? ஏறத்தாழ 240 கோடி எலிகள்! அடேயப்பா!... என்று நினைக்கின்றீர்களா? இத்தனை எலிகளும் இவற்றின் கூட்டாளிகளாகிய பூச்சிகளுமே சேர்ந்து நாம் உண்ணும் உணவுப் பொருள்களில் ஆண்டு தோறும் 2,06,00,000 'டன்' களைத் தின்று தீர்த்து விடுகின்றன. இந்த அளவு உணவுப் பொருள், நாம் வெளிநாடுகளிலிருந்து ஆண்டு தொறும் பெறுகின்ற உதவி உணவுப் பொருள்களைவிட மிகவும் மிகுதியானதாகும், இவை எலிகளா? இல்லை புலிகளா?



# பிழையில்லாமல் எழுதுங்கள் பேசுங்கள்

## கலப்புமொழி எதற்கு ...?

மொழியைப் பிழையில்லாமல் பேசுதல் வேண்டும். மொழி பிழையில்லாதிருந்தால்தான் நாம் கூறும் கருத்தும் பிழையில்லாமல் இருக்கும். கருத்தைச்சரியாகப் புரிய வைப்பது சரியான மொழியே.

ஒரு மொழிக்கு உரிய சொல்லை இன்னொரு மொழியில் கலந்து சொல்லுவதும் ஒருவகைப் பிழையே. பிழை என்பது சரி இல்லாதது தானே!

" நான் பள்ளிக்கூடம் போய்க்கொண்டு இருக்கின்றேன் " என்பது சரியான தொடராகும்.

" I AM GOING TO பள்ளிக்கூடம் " என்பதோ " நான் GOING TO SCHOOL " என்பதோ பிழைதானே.

தமிழில் சொன்னால் 'நான் பள்ளிக்கூடம் போய்க்கொண்டு இருக்கின்றேன்' என்று சொல்லுங்கள்.

ஆங்கிலத்தில் சொல்வதானால் " I AM GOING TO SCHOOL " என்று சொல்லுங்கள் எந்த மொழியில் சொன்னாலும் கலப்புப் பிழை இல்லாமல் கூறுங்கள். அரிசியில், பருப்பையோ பருப்பில் கொத்து மல்லி விதைகளையோ கலந்தால் பிழைதானே! அப்படிப்பட்ட பிழைகளை நீங்கள் செய்வது கூடாது. அப்படிச் செய்தால் உடல் கெடும்; நோய் வரும்; வாழ்க்கை அழிந்து போகும் இல்லையோ ? மொழிகளையும் அப்படிக் கலந்து பேசுவதால் கருத்து கெடும்; அழகு குறையும்; மொழியும் சிறிது சிறிதாக அழியும்; அறிவும் வறண்டு போகும்.

நீங்கள் இன்னும் என்ன என்ன பிழைகளைச் செய்யக்கூடாது. என்பதை இனி வரும் இதழ்களில் தொடர்ந்து படியுங்கள். O



# குட்டிக்கதை

## சுமை குறையுமா?

கிரேக்க நாட்டில் 1300 ஆண்டுகளுக்கு முன் ஈசாப் என்ற ஓர் அறிஞர் இருந்தார். அவர் மக்களுக்காகவே அறநெறிக் கதைகள் பலவற்றைச் சொல்லியுள்ளார். அவரிடம் ஒரு நாள் சிலர் 'ஐயாவே! அரசாங்கம் ஒருவர் கைகளிலிருந்து இன்னொருவர் கைகளுக்குப் போனால் மக்களுக்கு ஏதாவது நன்மை விளையுமா?' என்று கேட்டனர். உடனே கீழ்க்கண்ட கதையை அவ்வறிஞர் அவர்களிடம் சொன்னார்:

''ஒருவனிடம் ஒரு கழுதை இருந்தது. அதனிடம் பல கடினமான வேலைகளை வாங்கி, அந்த வருமானத்தைக் கொண்டு அவன் வாழ்க்கை நடத்தி வந்தான். ஒரு நாள் அவன் அக்கழுதையின் மேல் கனமான மூட்டைகளை ஏற்றிக்கொண்டு அருகில் உள்ள ஊருக்குப் போய்க் கொண்டிருந்தான். இடையிலே ஒரு காடு இருந்தது. அதைக் கடந்து கொண்டிருக்கையில் கொள்ளைக்காரர் சிலர் குதிரைகளின்மேல் தொலைவில் வந்துகொண்டிருப்பதைப் பார்த்தான். உடனே கழுதையிடம் ''கொள்ளையர்கள் வந்து நம்மைப் பிடித்துக் கொள்ளுவார்கள்; அவர்களிடம் பிறகு அடிமையாக நாம் உழைக்க வேண்டும். அதனால் வா ஓடி ஒளிந்து கொள்ளலாம்; அவர்கள் போனபின் வெளியில் வரலாம்'' என்றான்.

அதற்கு, ''நான் ஏன் உங்களுடன் ஓடி வரவேண்டும். என்னைப் பிடித்துக் கொண்டு அடிமைப் படுத்துவோர் எவராயிருந்தாலும் அவர்களிடமும் நான் இப்படிப்பட்ட மூட்டைகளைச் சுமந்துதானே ஆக வேண்டும். அப்படியானால் நான் தப்பித்துக் கொள்ளுவதால் என்ன பயன்? நான் யாருக்கு ஊழியம் செய்தாலும் ஒன்றுதானே?'' என்றது கழுதை.

இந்தக் கதையைச் சொல்லி முடித்துவிட்டு ஈசாப் மக்களைப் பார்த்து, ''மக்களே! அரசாங்கம் மாறுவதால் ஆளுபவனுடைய பெயர்தான் மாறுமே ஒழிய, உங்களுக்குக் கிடைக்கும் பலன் ஒன்றுதான் என்று கூறினார்.




பள்ளிக்கூடம் முடிந்ததும் சேரன் துள்ளிக் குதித்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். அங்கே ஊரிலிருந்து அவன் தாத்தா வந்திருந்தார். தாத்தா கொண்டு வந்த தின்பண்டங்களையும் பழங்களையும் சேரன் தின்றுகொண்டே, 'தாத்தா நீங்கள் காவிரியாற்றை எப்படிக் கடந்து வந்தீர்கள்?" என்றான். "ஒரு படகு வந்தது. அதில் ஏறிக்கொண்டு வந்தேன்'' என்றார் தாத்தா. சேரன் துடுக்கான பையன். அவன் மீண்டும் தாத்தாவிடம் "தாத்தா, படகில் உங்களோடு வந்தவர் எத்தனைப் பேர்? நூறு பேர் இருப்பார்களா?'' என்று கேட்டான்.

தாத்தா சேரனின் அறிவுத் திறத்தைப் பார்க்க எண்ணினார். ஆகையால் சேரனிடம், " இல்லை தம்பி, படகில் வந்த எங்களையும் எங்களைப் போல் இன்னொரு மடங்குப் பேரையும், எங்களில் பாதியையும், ~~உன்னையும்~~ சேர்த்தால்தான் நூறு பேர் ஆவார்! அப்படியானால் படகில் வந்தவர்கள் எத்தனைப் பேர் என்பதை நீயே கணக்கிட்டுக் கொள்!'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

சேரனுக்கு அந்தக் கணக்குக்கு விடை தெரியவில்லை. எங்கே! உங்களுக்குத் தெரிகின்றதா? பாருங்கள். தெரியாவிட்டால் அடுத்த மாத இதழைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்களேன்! O

---

## குழந்தைகளே!

'தமிழ்ச்சிட்டு' உங்கள் இதழ். நீங்கள் அறிவு, கலை, மக்கள் பற்றி, பாட்டு, கதை, கட்டுரை, துணுக்குகள், புதிர்கள், விடுகதை, வேடிக்கை முதலியவற்றை எழுதியனுப்புங்கள். அடுத்த இதழில் வெளிவரும் "எங்கள் விருப்பம் என்ன'' என்னும் பகுதிக்கும் எழுதுங்கள். எழுதியனுப்புபவை உங்கள் சொந்தக் கருத்துகளாக மட்டும் இருக்க வேண்டும்.

— அமைச்சர்.

# மாணவர்க்கான மணிமொழிகள்

தமிழ்ச்சிட்டுகளே,

- உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொரு திறமையோ ஆற்றலோ மறைந்து கிடக்கின்றது. அதனை மலரச் செய்வதே வாழ்க்கை என அறிந்து கொள்ளுங்கள்.
- ஒழுக்கம் உயிரினும் மேலானது. ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் தவறாமல் கடைப்பிடியுங்கள்.
- நூல் நிலையங்கட்குச் சென்று சிறந்த அறிவு நூல்களையும் நல்ல செய்தித்தாள்களையும் படிப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.
- பெரியோர்களின் வாழ்க்கைக் கதைகளைப் படித்து அவர்களைப் போல் நீங்களும் சிறந்தவர்களாக முயற்சி செய்யுங்கள்.
- நல்லுணர்வையும் பண்பாட்டையும் கெடுக்கக்கூடிய திரைப்படங்களில் வீணாக மயங்கி உங்களையே கெடுத்துக் கொள்ளாதீர்கள்.
- எல்லா உயிர்களிடத்தும் அன்பாயிருங்கள். உங்கள் மகிழ்ச்சிக்காக அவற்றுக்கு ஊறு விளைவிக்காதீர்கள்.
- பிறருக்கு உங்களால் இயன்ற அளவு நன்மை செய்தல் வேண்டும் என்பதைக் கட்டாயமாகக் கொள்ளுங்கள்.
- உங்கள் பெற்றோரிடத்தும் பெரியோரிடத்தும் பணிவுடனும் இன்சொல்லுடனும் நடந்து கொள்ளுங்கள்.
- சோலைகளிலும் காடுகளிலும் திரிந்து இயற்கை அழகைச் சுவைப்பதிலும், இயற்கைப் பொருள்களோடு உறவாடுவதிலும் இன்பம் காணுங்கள்.
- இறுதியாக, உங்கள் தாய் மொழியாகிய தமிழும், தாயகமாகிய தமிழகமும் இருவிழிகள் எனக்கொண்டு அவற்றுக்கு இயன்ற அளவு பணிபுரியுங்கள்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.